# SOURCE MATERIAL FOR MODEL EXAM I – PAPER III

## JUSTICE A.K. RAJAN COMMITTEE RECOMMENDATION - NEET

**Introduction:**

The report submitted by the Justice AK Rajan Committee stated that if NEET continues for a few more years, it would affect the healthcare infrastructure of Tamil Nadu, bringing a shortage of doctors' appointments in primary health centres and government hospitals.

In a 165-page report submitted by retired Justice AK Rajan Committee on the impact of NEET, the report stated that NEET should be eliminated immediately.

The report submitted on September 14 to the Tamil Nadu Chief Minister MK Stalin stated that if NEET continues for a few more years, it would affect the healthcare infrastructure of Tamil Nadu, bringing a shortage of doctors' appointments in primary health centres and government hospitals.

The report also stated that students from rural regions and poor backgrounds might lose access to medical education.

The Committee also laid out that students who studied Tamil as a medium couldn't fare well in NEET and strongly condemned the culture of 'coaching', claiming that it is gradually replacing 'learning', which is very essential for the would-be-Doctors (medical aspirants) to acquire all skills reasoning, decision making, judgemental, analytical and psychosocial skills which are acquired only in the schooling-learning, not in the coaching.

**The committee made the below recommendations to state governments:**

- The state government may undertake immediate steps to eliminate NEET from being used in admission to medical programmes at all levels by following the required legal and/or legislative procedures.

- The government may take a stand that the words ' university education' found in Entry 25 List III is a general provision and 'Regulation of Universities' in Entry II is a special provision: Entry 32 is an exclusive state subject that cannot be ignored. Therefore, Article 254 cannot be invoked to override Act 3/2007 insofar as it relates to entry 32. Hence, admission to affiliated colleges under the Tamil Nadu Dr M G R Medical University are governed by Act 3 of 2007 and hence admission to those seats will be filled as per the provisions of that Act. (S.14 of NMC Act has no application to those seats). In this regard, the state may follow the required procedures to satisfy the legal and constitutional provisions.

- Alternatively, the state government may pass an Act, similar to the Act 3/2007, indicating the need for elimination of NEET at all levels of Medical Education, and get the President's assent for the same. This will ensure social justice and protect all vulnerable student communities from being discriminated in admission to medical education programmes.

- The HSc (Higher Secondary) scores shall become the sole admission criteria for admission to first degree medical programmes, and to ensure equality in opportunity for students from different Boards of Education, normalisation of scores may be followed.

- The socio, economic and other demographic adversities that cause poor performance of all relevant students, mainly the disadvantaged and underprivileged, in their HSc examination shall be identified, and according to the degree of intensities of adversities, re-profiling of scores can be done using a pre-developed framework of 'Adversity Score'.

- The school education, up to the level of HSc, shall be reformed such that 'learning' as opposed to 'coaching' is fostered, and that right from curriculum through teaching and learning to learning assessment (Board Examination), all shall be tweaked toward enabling and empowering students with subject knowledge and higher order skills including reasoning, decision making, social disposition and so on. In particular, the rote form of learning assessment that leads to coaching shall be eliminated and the acquired knowledge and skills shall be focussed on.

- So far as the 'Deemed Universities' is concerned, an Act has to be passed by the Tamil Nadu assembly to bring all the Deemed Universities of Tamil Nadu under its purview, as under Act 3/2007 and the President's assent has to be obtained.

- The report concluded by saying that if NEET continues, Tamil Nadu may go back to the pre-independence days, where in small towns and in villages only 'bare-foot' doctors were catering for the needs that were available and that Tamil Nadu as a state would go down in the rank among States, in the Medical and Health Care system.

## நீட் தேர்வு குறித்த ஏ.கே. ராஜன் கமிட்டியின் அறிக்கை

மருத்துவ கல்லூரிகளில் மாணவர்கள் சேர நீட் தேர்வு எழுதுவது கட்டாயமாக்கப்பட்டிருப்பதற்கு தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்திருக்கும் நிலையில், அந்தத் தேர்வித் தாக்கம் குறித்து ஆராய்வதற்காக, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.கே. ராஜன் தலைமையில் ஒரு குழுவை தமிழ்நாடு அரசு அமைத்தது.

இந்தக் குழுவில் சமூக சமத்துவதற்கான மருத்துவர்கள் அமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத், முன்னாள் துணை வேந்தர் எல். ஜவஹர் நேசன், மருத்துவத் துறைச் செயலர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலர் காகர்லா உஷா உள்ளிட்ட 9 பேர் இடம்பெற்றிருந்தனர்.

நீட் தேர்வானது சமூக, பொருளாதார, கூட்டாட்சி அரசியலை எவ்விதத்தில் பாதித்திருக்கிறது, அரசுப் பள்ளிகளில் படிக்கும், கிராமப்புற, நகர்ப்புற ஏழைகளை இந்தச் சேர்க்கைமுறை எவ்விதத்தில் பாதித்திருக்கிறது என்பதை ஆராய்வது, அப்படித் தடைகள் இருந்தால் அந்தத் தடைகளை நீக்குவதற்கான வழிகளைப் பரிந்துரைப்பது, மாணவர்களைத் தேர்வுசெய்ய நீட் தேர்வு சமத்துவமான வழிதானா என்பதை ஆராய்வது, காளான்களைப் போல முளைத்து வரும் நீட் பயிற்சி மையங்கள் தமிழகக் கல்வி முறையின் மீது ஏற்படும் தாக்கத்தை ஆராய்வது போன்றவை இந்தக் குழுவின் பணிகளாக வரையறுக்கப்பட்டிருந்தன.

# ஏ.கே. ராஜன் குழுவின் முடிவுகள்

1. நீட் தேர்வானது, பலதரப்பட்ட சமூகங்களின் பிரதிநிதித்துவத்தை மருத்துவக் கல்வியில் குலைக்கிறது. சமூகத்தில் வசதியான பிரிவினருக்கு சாதகமாக இருப்பதோடு, பின்தங்கிய நிலையில் இருப்பவர்களின் மருத்துவக் கனவைக் குலைக்கிறது. தமிழ் வழியில் படித்தோர், கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள், அரசுப் பள்ளிகளில் படித்தவர்கள், 2.5 லட்ச ரூபாய் வருமானத்திற்கு கீழே உள்ளவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தினர், பழங்குடியினர் ஆகியோர் இந்தத் தேர்வால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

2. நீட் தேர்வானது, மீண்டும், மீண்டும் தேர்வழுதுபவர்களுக்கே சாதகமானதாக இருக்கிறது. முதல் முறையாக தேர்வு எழுதுவோருக்கு பாதகமாக இருக்கிறது.

3. நீட் தேர்வு மாணவர்களிடம் பெரும் அழுத்தத்தையும் பதற்றத்தையும் உருவாக்குகிறது. இந்தத் தேர்வில் நடக்கும் முறைகேடுகள், மாணவர்களிடம் பெரும் பதற்றத்தை ஏற்படுத்துகின்றன

4. தரமான மாணவர்கள் மருத்துவப் படிப்புகளில் சேர்வதை நீட் தேர்வு உறுதிசெய்யவில்லை. மாறாக குறைவான திறனுள்ள மாணவர்கள் எம்பிபிஎஸ் இடங்களைப் பெறுவதையே உறுதிசெய்கிறது. மாறாக, 12ஆம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் சேர்க்கையை நடத்தும்போது தரமான மாணவர்கள் எம்.பி.பி.எஸ். இடங்களைப் பெறுகிறார்கள்.

படக்குறிப்பு,

**நீட் தேர்வுக்கு முன்னும் பின்னும் எம்.பி.பி.எஸ் படிப்பில் சேர விண்ணப்பித்த கிராமப்புற மற்றும் நகர்ப்புற மாணவர்களின் எண்ணிக்கையைக் காட்டும் தரவுகள்.**

5. மருத்துவ படிப்பில் முதுநிலை இடங்களில் 50 சதவீதத்தையும் சூப்பர் ஸ்பெஷாலிட்டி பரிவில் 100 சதவீதத்தையும் அகில இந்திய ஒதுக்கீட்டிற்கு அளிப்பதால், அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். இது மாநிலத்தின் மருத்துவக் கட்டமைப்பை குலைக்கிறது. அகில இந்திய ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்படாததால், இது சமூக நீதிக்கு எதிரானது.

6. இந்த பாரபட்சமான நீட் தேர்வினால், மாநிலக் கல்வி வாரியத்தின் கீழ் படிப்பவர்கள் கல்வி முறை மீதே நம்பிக்கை இழக்கிறார்கள்.

7. நீட் தேர்வுக்கு முந்தைய மருத்துவர்கள், பிந்தைய மருத்துவர்கள் என பிரித்துப் பார்த்தால், நீட் தேர்வுக்குப் பிந்தைய மருத்துவர்கள் அனைவரும் வசதியான, நகர்ப்புறங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். அடிமட்ட சமூகத்தின் பல்வேறு விதமான வித்தியாசங்கள் குறித்த புரிதல் இல்லாமல் இருக்கிறார்கள். இதனை துவக்கத்திலேயே சரிசெய்யா விட்டால், வருங்காலத்தில் இது மிக மோசமாக எதிரொலிக்கும்.

# ஏ.கே. ராஜன் குழுவின் பரிந்துரைகள்

நீட் தேர்வு தொடர்பான பிரச்னையை சரி செய்ய ஏ.கே. ராஜன் குழு பல்வேறு பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

1. நீட் தேர்வை அகற்றுவதற்கான சட்டரீதியான வழிகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும்.

2. 2007ஆம் ஆண்டின் 3வது சட்டத்தைப் போல, மருத்துவக் கல்வியின் அனைத்து நிலைகளிலும் நீட் தேர்வை நீக்குவதற்கான ஒரு சட்டத்தை இயற்றி அதற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

3. எம்பிபிஎஸ் படிப்பில் சேர்க்கைக்கு 12ஆம் வகுப்புத் தேர்வு மதிப்பெண்களையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும். பல்வேறு வாரியங்களைச் சேர்ந்த மாணவர்கள் போட்டியிடுவதால், அதனை சமப்படுத்த ஒரு முறையைக் கையாளலாம்.

4. மாணவர்களின் சமூக, பொருளாதார பின்னணி அவர்களின் 12ஆம் வகுப்பு மதிப்பெண்களை வெகுவாகப் பாதிக்கிறது. ஆகவே, அவற்றை அடையாளம் கண்டு சரிசெய்ய வேண்டும். அவர்களை மதிப்பிட "Adversity Score" என்ற முறையைப் பின்பற்ற வேண்டும்.

5. 12ஆம் வகுப்புவரை எல்லா மட்டங்களிலும் மனப்பாடம் செய்து, பயிற்றுவித்து தேர்வடைவதை ஊக்குவிக்காமல், கற்பதை ஊக்குவிக்க வேண்டும்.

6. எல்லா நிகர்நிலை பல்கலைக்கழகங்களையும் தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான சட்டத்தை தமிழக அரசு இயற்றி, குடியரசு தலைவரின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

# CHIEF MINISTER M.K. STALIN TERMS NEET IS DISCRIMINATORY, AGAINST SOCIAL JUSTICE

**Introduction:**

Elections were held in the Province of Madras when the electoral system was first established in India to elect people's representatives by the people. The Justice Party, pioneer of the Dravidian movement, formed the government in the first general election in 1920, when the country was under British rule.

All those who travelled to India from England to observe the working of the Madras Provincial Assembly remarked that the Madras Province is the only province in India governed by the rule of law and administrative protocols.

This is a significant day in the history of this House, which established such democratic values. We have assembled here to defend democracy, to preserve democracy's dignity, to uphold the principle of federalism, and to secure the right to education.

**To defend federal philosophy**

We are not only getting together to talk about the NEET Exam [the National Eligibility-cum-Entrance Test]. We have gathered to preserve the Tamil Nadu Legislature's sovereignty and rights. Federalism is a fundamental idea that truly safeguards the ethnic, linguistic, and cultural diversity of the Indian subcontinent! We have come together to ensure that the great federal philosophy remains intact.

I stand in this Assembly that has laid the foundation for success in upholding social justice, legal justice, oppressed people's rights, the greatness of Tamil ethnic community and its language. And I speak with the confidence that this Assembly can and will definitely eliminate the social injustice of NEET. Today, we are here in this Special Assembly to propose a policy of social justice in education for the entire country, having been trained in the footsteps of our leader Anna. To quench students' passion for medical education, we have all come together to work in solidarity and promote social justice.

NEET is not a system established by the Constitution. It was not made a part of the Constitution. The Medical Council of India mandated the creation of NEET. When such an examination was proposed in 2010, Muthamizharinar Kalaignar, the then-Chief Minister of Tamil Nadu, vehemently opposed it.

**Much opposed**

It was also opposed by a number of Indian States. This examination has been challenged in 115 cases across India. Tamil Nadu is the State that is leading the charge in this direction. All of these cases were heard by the Supreme Court.

NEET was declared unconstitutional by the Supreme Court itself on July 18, 2013. The Chief Justice of India delivered the judgment. The exam was subsequently abolished across the Indian subcontinent.

However, after the Bharatiya Janata Party (BJP) won the election and formed the government, a private training institute reopened the issue. The Supreme Court heard the case of NEET. "Judgment is recalled" and "Hear this case afresh," the Supreme Court said on May 24, 2016 after hearing the case. On this basis, the BJP-led Union government issued an ordinance on April 11, 2016, which quickly implemented NEET across the country.

Private training institutes benefit from NEET. The NEET Exemption Bill is being introduced for the benefit of those who cannot afford to pay so much for training. NEET is an impediment to the entitlement of poor and needy children to education. In their dream of becoming doctors, a barrier wall has been placed in the name of NEET. "You can't be a doctor," says NEET. "You don't deserve it," it says, halting one's progress. That is why the NEET Exemption Bill has been introduced. I do not think I need to go into great detail about the abnormalities in that exam at this assembly.

So, to summarise, NEET is not a holy cow. It attempts to marginalise students from low-income families in the guise of merit. As a result, we oppose the examination and demand an exemption.

The question I would want to address in this forum is whether NEET, which has sent some students to the graveyard and others to jail, is really required. This is a question that has been raised by the entire student community as well as parents.

**A detailed review**

On June 19, 2021, a committee led by retired High Court judge A.K. Rajan was formed to investigate the issues and submit a report on the effects of NEET on poor and backward students. The public was consulted. On July 14, 2021, the Committee submitted a 193-page report to the Government based on those comments. They claimed that Government school students were unable to follow their dreams of pursuing a medical education.

I have formed a committee under the leadership of the Chief Secretary to provide detailed recommendations on this report. After careful consideration, the Bill exempting Tamil Nadu from NEET was enacted by this Assembly. We did a lot of study and were able to pass this Bill, supported with factual information.

The NEET Exemption Bill was passed with the support of all members of this House, with the exception of four BJP members. The Bill reflected not only the sentiments of Tamil Nadu as a whole, but also the Assembly's notion of its sovereignty.

It had to be approved by the Hon'ble Governor, and he should have sent it to the Hon'ble President for his approval. Instead, he kept it pending for 142 days before reaching a decision — despite our numerous requests — and then returned it to us. In this Assembly, I must state unequivocally that the reasons he cited for rejecting the Bill were incorrect.

On June 10, 2021, the Justice A.K. Rajan Committee was set up under G.O. No.283, Department of Health and Family Welfare. The committee was made up of academics and government officials. The study's terms of reference were also made public by this high-level group.

The public was asked to provide feedback to the committee. Hundreds of thousands of people had expressed their opinions to the Commission by email, mail, and petition boxes put in various locations.

According to the recommendation, NEET has limited the diversity of community representation in MBBS and higher medical courses by impeding the desire of those underprivileged of receiving medical education and favouring the socio-economically rich sections. The statistics for this can be found in the report as well. According to the survey, government schoolchildren, those whose parents' annual income is less than ₹2.5 lakh, the backward (BC), the most backward (MBC), Scheduled Castes (SC), and Scheduled Tribes (ST) are the most affected.

The Governor criticised the study for claiming that NEET is "against merit". It is worth noting that the report of the Justice A.K. Rajan committee includes proven facts rejecting this. Among those chosen so far, rural poor students have been affected. According to the research, those who studied in the Tamil medium in government schools are also harmed. At this point, I strongly advise that no one mistakenly counts those who benefit from the Government of Tamil Nadu's 7.5% reservation as having profited from NEET.

**The power to legislate**

A five-judge Supreme Court Bench heard the matter of Modern Dental College vs Madhya Pradesh government. The Supreme Court verdict was clear: The State government has the power to legislate on student admissions to higher education institutions.

In a separate judgment delivered by Justice Banumathi in the same case, she also ruled that the law regulating student admission was within the jurisdiction of the State government. We passed the Bill against NEET solely using the legislative power of the State legislature.

The Governor has urged that NEET be made mandatory by the Constitution. According to the Constitution, any legal provision can be made, but only for the rights of the socially and economically disadvantaged. We are bringing this NEET Exemption Bill back on that basis. The Constitution is anti-discriminatory. However, NEET is inherently discriminatory. Social justice is emphasised in constitutional law. NEET, on the other hand, is opposed to social justice. The term "justice of the law" is used in constitutional law. But NEET favours the rich. The Indian Constitution is built on the principle of equality. NEET, on the other hand, is the polar opposite of equality. NEET is opposed to all of the Constitution's fundamental rights. That is why we are requesting NEET exemption.

My pain stems from having to debate for so long about a dreadful exam that disproportionately impacts poor and rural students.

The return of this Bill has also put into doubt the right of our State of Tamil Nadu. This legislature's sovereignty has been brought into question. The autonomy of States has been questioned. That is what concerns me. What will happen to the constitutionally mandated relationship between the Union and State governments? What are the rights and responsibilities of people of various races, languages, and cultures?

We passed a Bill on September 13, 2021 to exempt students from NEET based on the power we have. The Governor is required by law to reserve it to the President for approval. I expect the Governor to carry out his responsibilities correctly. That is the Governor's responsibility, which is limited by the legislative power of the legislature, which is elected by the people.

I hope that the Governor will respect the sentiments of the people of Tamil Nadu and act in the best interests of the students of Tamil Nadu by sending the NEET Exemption Bill to the President without delay, which will be reconsidered and

passed under the power conferred on the people elected by the Legislature by the Constitution. I urge everyone to support this Bill in order to defend the right to education, which has been denied for a long time, as well as the State rights of Tamil Nadu and the social rights of Scheduled Castes, tribals, backward/most backward/the oppressed/the poor/the marginalised/and rural peoples.

# நீட்' சமூக நீதிக்கு எதிரானது! என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை

இந்தியாவில் மக்களால் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் தேர்தல் ஆட்சி முறை நிறுவப்பட்ட போது சென்னை மாகாணத்திலும் தேர்தல் நடந்தது. 1920-ம் ஆண்டு நடந்த முதல் பொது தேர்தலில் திராவிட இயக்கத்தின் தலைமகனான நீதிக்கட்சி ஆட்சி அமைத்தது. அது பிரிட்டிஷ் ஆட்சிக்காலம்.

இங்கிலாந்தில் இருந்து இந்தியாவுக்கு வந்தவர்கள் எல்லாம் சென்னை மாகாணத்தின் சட்டமன்றம் எப்படி நடக்கிறது என்பதை பார்க்க வந்ததாகவும், அப்போது இந்தியாவிலேயே சென்னை மாகாணத்தில் தான் நிர்வாக நெறிமுறைப்படி சட்டத்தின் ஆட்சி நடப்பதாகவும் அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட மக்கள் ஆட்சியின் விழிமியங்களை உருவாக்கிய மாமன்றத்தில் இந்த நாள் என்பது மிக முக்கியமானது. ஜனநாயகத்தை காக்க மக்களாட்சியின் மாண்பை காப்பாற்றுவதற்காக கூட்டாட்சி தத்துவத்தை நிலை நிறுத்துவதற்காக கல்வி உரிமையை வென்றெடுப்பதற்காக இன்று நாம் கூடி இருக்கிறோம்.

நீட் தேர்வுக்கு எதிராக விவாதிப்பதற்காக மட்டும் நாம் கூடவில்லை. நமது தமிழ்நாட்டின் சட்டமன்றத்தின் இறையாண்மையை உரிமையை காப்பாற்றுவதற்காகவும் கூடி இருக்கிறோம். பல்வேறு இனம், மொழி, பண்பாடு கொண்ட இந்திய பெருநாட்டை உண்மையில் காக்கும் உன்னதமான தத்துவம் என்பது கூட்டாட்சி தத்துவம்.

அந்த கூட்டாட்சி தத்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக நாம் இங்கு கூடி இருக்கிறோம். 16 வயதிலே அரசியல் களத்துக்குள் நான் நுழைந்தேன். எனது பொது வாழ்வில் மறக்க முடியாத நாளாக இந்த நாள் அமைந்துள்ளது.

அந்த உணர்வோடு தான் இந்த மாமன்றத்தில் நான் நின்று கொண்டிருக்கிறேன். நூறு ஆண்டுகளுக்கு முன்பே சமூகநீதிக்கு அடித்தளம் அமைத்தது இந்த சட்டமன்றம். நமது அரசியலமைப்பு சட்டத்தில் முதல் திருத்தம் கொண்டுவர உந்து சக்தியாக அமைந்தது இந்த சட்டமன்றம்.

அகில இந்திய அளவில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்துக்கு மத்திய அரசு பணிகளில் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் மண்டல் கமிஷன் அறிக்கையை செயல்பட வைத்ததும் இந்த சட்டமன்றம் தான்.

அரசு கல்லூரி மாணவர்களுக்கு பொறியியல் உள்பட தொழில் கல்வியில் 7.5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கியதும் இந்த சட்டமன்றம்.
அகில இந்திய தொகுப்பிற்கு அளிக்கும் மருத்துவ இடங்களில் 27 விழுக்காட்டில் இடஒதுக்கீட்டை தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல ஒட்டு மொத்த இந்திய துணை கண்டத்துக்கும் பெற்றுத் தந்தது இந்த சட்டமன்றம் தான்.

இன்றைக்கு இருக்கிற 69 இட ஒதுக்கீட்டை நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் செயல்படுத்தி சாதனை படைத்தது இந்த சட்டமன்றம். மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு இருந்த நுழைவுத் தேர்வை ரத்து செய்து இதே சட்டமன்றத்தில் சட்டம் ஏற்றப்பட்டது. அப்போது இந்திய குடியரசு தலைவரும் ஒப்புதல் அளித்துள்ளார்.

நீட் தேர்வில் வெற்றிபெற ஆள்மாறாட்டங்கள் நடந்து இருக்கின்றன. தேர்வர்களுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ உதவும் முறைகேடுகள், மதிப்பெண்களை திருத்தம் செய்வது, தேர்வு எழுத மாற்று நபர்களை பயன்படுத்துதல் போன்ற முறைகேடுகள் வழக்கமாகிவிட்டன.

நீட் தேர்வு மாணவர்களை கொல்லக்கூடியது. அது மாணவர்களுக்கு பலி பீடம். சில மாணவர்களை சிறைச்சாலைக்கும், சில மாணவர்களை கல்லறைக்கும் அனுப்பிய நீட் தேர்வு தேவையா?

நீட் தேர்வு என்பது ஊரக மாணவர்களை மருத்துவ கல்லூரிகளுக்குள் நுழைய விடாமல் தடுக்கிறது. மாணவர்களின் மருத்துவ கனவுக்கு தடுப்புச்சுவராக உள்ளது. இது ஏழை-எளிய மாணவர்களை ஓரம் கட்டுவதற்காக கொண்டுவரப்பட்டது.

நீட் விலக்கு கோரும் மசோதாவை கவர்னர் திருப்பி அனுப்பியதற்கு கூறிய காரணங்கள் சரியானவை அல்ல. சம்பந்தப்பட்ட அனைவரிடமும் கருத்து கேட்டே ஏ.கே.ராஜன் குழுவினர் அறிக்கை அளித்துள்ளனர்.

நீட் தேர்வு வருவதற்கு முன்பு 90 சதவீத இடங்களை மாநில பாடத்திட்டத்தில் படித்த மாணவர்கள் பெற்று வந்தனர். பள்ளிகளில் படித்து வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் தகுதி என்ற போர்வையில் கொண்டுவரப்பட்டுள்ள இந்த அறிவுத்தீண்டாமை அகற்றப்பட வேண்டும்.

நீட் என்பது சமூக நீதிக்கு எதிரானது. பயிற்சி பெற முடியாதவர்கள், நீட் தேர்வில் வெற்றிபெற முடியாத நிலைதான் உள்ளது. நீட் தேர்வு பணக்கார நீதியை பேசுகிறது. அரசியல் அமைப்பு சட்டம் தான் சமூக நீதியை பேசுகிறது.
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் கொள்கை முடிவை வெறும் நியமன பதவியில் அமர்ந்திருக்கும் ஒரு ஆளுநர் மதிக்காமல் திருப்பி அனுப்புவது மக்களாட்சி தத்துவத்துக்கு எதிரானதல்லவா? பிறகு எந்த நம்பிக்கையில் மக்கள் வாக்களிப்பார்கள்? யாரை நம்பி வாக்களிப்பார்கள்? என்பது தான் நாம் எழுப்ப வேண்டிய கேள்வி?

அரசியல் அமைப்புச் சட்டம் கூறக்கூடிய சமத்துவத்துக்கு எதிரானது நீட் தேர்வு. மசோதாவை ஆளுநர் திருப்பி அனுப்பியதன் மூலம் சட்டமன்றத்தின் இறையாண்மை கேள்விக்குறியாகி உள்ளது. நீட் விலக்கு சட்ட முன் வடிவை நிறைவேற்றி மீண்டும் அனுப்பி வைப்பதன் மூலமாக இந்தியாவுக்கே ஒரு ஒளி விளக்கை நாம் ஏற்றி வைக்கிறோம்.

ஆளுநர் என்பவர் அமைச்சரவைக்கு கட்டுப்பட்டே நடந்துகொள்ள வேண்டும். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்பதை இதே சட்டமன்றத்தில் முன் மொழிந்தவர் முன்னாள் முதல்வர் கருணாநிதி.

மீண்டும் சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பப்படும் நீட் விலக்கு மசோதாவை காலம் தாழ்த்தாமல் ஆளுநர், குடியரசு தலைவருக்கு அனுப்பி வைப்பார் என்று நம்புகிறேன்.

அரசியல் சட்டப்பிரிவு 254-1-ன் கீழ் மாநில சட்டமன்ற கூட்டம் நிறைவேற்றினால் அரசியல் சட்டப் பிரிவு 200-ன் கீழ் அதற்கு ஒப்புதல் வழங்கக்கூடிய அதிகாரத்தை ஆளுநர் அமைச்சரவையின் முடிவுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

ஆளுநருக்கு அனுப்பப்படும் சட்ட முன் வடிவு சொந்த கொள்கைக்கு மாறாக உள்ளது என்று நிராகரிக்காமல் அமைச்சரவை எந்த அறிவுரை வழங்குகிறதோ அதன்படி நடக்க வேண்டும்.

13.9.2022 அன்று நீட் தேர்வில் இருந்து விலக்கு அளித்த சட்ட முன் வடிவை நாம் நிறைவேற்றினோம். அதை குடியரசுத்தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டியது ஆளுநரின் அரசியல் சட்ட கடமை. அந்த கடமையை முறையாக இனியாவது ஆளுநர் செய்வார் என்று நான் நினைக்கிறேன். எதிர் பார்க்கிறேன். நீட் விலக்கு சட்ட முன்வடிவை இந்த அவையில் மீண்டும் நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மதித்து தமிழ்நாட்டு மாணவர்களின் நலன்களை எண்ணி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தில் அரசியல் சட்டம் வழங்கி இருக்கிற அதிகாரத்தின் கீழ் மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்படும் நீட் விலக்கு வடிவை காலம் தாழ்த்தாமல் குடியரசு தலைவருக்கு அனுப்பி வைப்பார் என்று நான் நம்புகிறேன்.

APPOLLO STUDY CENTRE